தேர்தலில் பேரவை போட்டியிடும் செய்தியை வலைதளத்தில் கண்டேன். மகிழ்ச்சியுற்றேன்

அனைத்து நிர்வாகிகளுக்கும் தோழர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

தேர்தல் களப் பணியாற்றும் நம் தோழர்களுக்கு இந்த கடிதத்தை சமர்பிக்கின்றேன்.

இரத்தத்தின் சொந்தங்களே அருந்ததிய தோழர்களே

அசுர ஆள்பலமும் பணபலமும் கொண்டு மோதும் தேர்தலெனும் போர்களத்தில்
நீ கிண்கிணியை அணிந்தாலும் எழுச்சியுற்று வீறுகொண்டு
நெஞ்சை நிமிர்த்தி புறப்பட்டாய் போர்களத்தை நோக்கி
அதுவே உன் வெற்றிதான், ஆம் முதல் வெற்றியன்றோ !

நாடே தேர்தல் கோலம் பூண்டிருக்கும் தருணத்தில்
போர்களத்தை கண்டு மலைத்து ஒளிந்து ஒடுங்கி முடங்கிடாமல்
வழக்கம்போல் ஊருக்கு உழைக்காமல்
உயர உயர்த்திட்டாய் உன்கொடியை முதன்முதலாய்

ஓடி உழைத்திடுவாய் பம்பரமாய்
நிலை நாட்டிடுக ஆதித்தமிழன் கொடி
இழிவை ஒழித்திடவே இம்மியும் சருகாமல் ஒன்றிடுவோம்
உரக்க ஒலித்திடுவாய் அண்ணன் அதியமான் கரம்பற்றி வழிநடக்க

எள்ளி நகையாடுவோரை மனிதவதை செய்வோரை
எச்சரிக்கை செய்திடுவாய் ஏறி மிதித்து அழித்திடுவாய்

சென்றிடுக சேரியெல்லாம் ஆற்றிடுக நெருப்புரையை
முருக்கேற்றிடுக நாடி நரம்புகளை
சேர்த்திடுக அருந்ததிய இளைஞர்களின் போர்ப் படையை

கொட்டிடுவாய் போர்முரசு முழங்கிடுக சங்கநாதம்
போர்களத்தை நோக்கி புறப்பட்டு போய் வருக வெற்றியுடன்!!!

- செல்வா